**செய்தி வெளியீடு எண்: 619** **நாள்: 16.10.2012**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.10.2012 அன்று தலைமைச் செயலகத்தில், இந்திய – இஸ்ரேல் புரிந்துணர்வு அடிப்படையில், திண்டுக்கல் மாவட்டத்தில், 10 கோடியே 18 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்திடும் சிறப்பு உற்பத்தி மையம் உருவாக்கிடும் திட்டத்தினையும்; கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 8 கோடியே 80 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் கொய்மலர் நாற்றுகள் உற்பத்தி செய்திடும் சிறப்பு மையம் உருவாக்கிடும் திட்டத்தினையும் துவக்கி வைத்தார்கள்.

தமிழகத்தில் உள்ள 56 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 14 கோடியே 23 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் அதிக அளவில் தரமான செடிகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்திட, உயரிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றிடத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கிடும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தோட்டக்கலைத் துறையில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் கையாளப்படும் நவீன தொழில்நுட்ப முறைகளை உடனுக்குடன் விரிவாக்கப் பணியாளர்களுக்கு பத்திரிகை செய்திகளின் வாயிலாக தெரிவித்து, துறையின் பணிகளை செம்மைப்படுத்த 2 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட “என்ஹான்ஸ்” என்ற மாத இதழையும்; தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், சாதனைகள், பணிபுரிந்த அலுவலர்களின் விவரங்களுடன் 5 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள “காபி டேபிள்” புத்தகத்தையும் 15.10.2012 அன்று வெளியிட்டார்கள்.

அப்போது, தோட்டக்கலைத் துறையில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் கையாளப்படும் நவீன தொழில்நுட்ப முறைகளை உடனுக்குடன் விரிவாக்கப் பணியாளர்களுக்கு செய்திகளாக தெரிவிக்கும் வகையில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட

“என்ஹான்ஸ்” என்ற மாத இதழை, அனைவரும் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் இனி வரும் காலங்களில் தமிழிலும் வெளியிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தோட்டக்கலைத் துறை தலைமையிடத்தினை 3 கோடியே 4 லட்சம் ரூபாய் செலவில் கைபேசி மூலம் நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படும் விதத்தை அறிந்து கொள்ளுதல்; தலைமையிடத்தில் பணிபுரியும் அலுவலர்களின் வருகையினைக் கைரேகை மூலம் பதிவு செய்தல்; அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் மேசைக் கணினி; காகிதமில்லா அலுவலகம்; காணொலி மூலம் மாவட்ட அலுவலர்களைத் தொடர்பு கொள்ளும் வசதி உள்ளிட்ட துறையின் கணினிமய திட்டங்களை துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், வேளாண்மைத் துறைச் செயலாளர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 16.10.2012